


28.08.2024

தலைப்புச் செய்திகள்

1. ஜன்தன் யோஜனா வங்கி கணக்கு திட்டம் மகளிர், இளைஞர், விளிம்பு நிலை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

2. புதுதில்லியில் இன்று நடைபெறும் 2-வது இந்தியா - சிலி கூட்டு ஆணைய பேச்சு வார்த்தையில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் பங்கேற்கிறார்.

3. தமிழ்நாட்டிற்கு உரிய கல்வி நிதியை மத்திய அரசு வழங்கவேண்டும் என்று மாநில பள்ளிக்கல்வி துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி வலியுறுத்தியுள்ளார்.

4. பொறியியல் பாடப் பிரிவில் இந்த ஆண்டு மாணாக்கர் சேர்க்கை தமிழ்நாட்டில் அதிகரித்துள்ளதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. க.பொன்முடி தெரிவித்துள்ளார்

5. ரு.ஞு. ஓப்பன் கிரான்ஸ்லாம் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் முதல் சுற்றில் ஸ்ரீராம், ஆண்ட்ரோஸி இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□

ஜன்தன் யோஜனா

பிரதமரின் ஜன்தன் யோஜனா வங்கி கணக்கு திட்டம் நிதி உள்ளடக்கத்திற்கு உத்வேகம் அளித்திருப்பதோடு மகளிர், இளைஞர், விளிம்பு நிலை சமூக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி இருப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

ஜன்தன் யோஜனா 10-வது ஆண்டு தினத்தை ஒட்டி இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் இத்திட்டம் கோடி கணக்கான மக்களுக்கு மதிப்பையும், மாண்பையும் வழங்கி உள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த திட்டத்தை வெற்றியாக்கிய பயனாளிகளுக்கு அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இந்த திட்டத்தின் வெற்றி குறித்து பேசியுள்ள மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் விளிம்பு நிலை சமூக மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு வழிகோலியுள்ள இத்திட்டம் அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தி இருப்பதாக குறிப்பிட்டார்.

ஊரக பகுதிகள் மற்றும் புறநகர் பகுதிகளில் 67 சதவிகித மக்கள் வங்கி கணக்கை தொடங்கி இருப்பதாகவும் அவர் கூறினார்.

நிதி உள்ளடக்கத்தின் முக்கிய அம்சங்களான வங்கி கணக்கு, கைப்பேசி, ஆதார் ஆகியவற்றை இணைத்ததன் மூலம் துரித வெளிப்படையான சீரான நேரடி பணப்பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் மக்கள் நலத்திட்டங்களின் கீழ் பயனாளிகளின் வங்கி கணக்குகளில் பணம் செலுத்தப்பட்டு மின்னனு பண பரிவர்த்தனை ஊக்குவிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்த திட்டம் தொடங்கப்பட்ட 10 ஆண்டுகளில் 53 கோடிக்கும் அதிகமானோர் வங்கி கணக்குகளை தொடங்கியுள்ளதாகவும், இந்த திட்டத்தின் கீழ் 2 லட்சத்து 31 ஆயிரத்து 236 கோடி ரூபாய் வைப்புத் தொகை பெறப்பட்டுள்ளதாகவும் நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

2015-ம் ஆண்டு மார்ச் மாதம் இந்த திட்டத்தின் பதினைந்தரை கோடி ரூபாயாக இருந்த வங்கி கணக்கு தற்போது 53 கோடி ரூபாயாக மூன்றரை மடங்கு அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் 66.6 சதவிகித வங்கி கணக்குகள் தொடங்கப்பட்டுள்ள நிலையில், இதில் 55.6 சதவிகிதம் பேர் மகளிர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமரின் ஜன்தன் வங்கி கணக்கு பயனாளிகளுக்கு 36 கோடி ரூபாய் மதிப்பிலான சுரியல அட்டைகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சகம் கூறியுள்ளது.

திருச்சி மாவட்ட வங்கிகளில் தொடங்கப்பட்டுள்ள ஜன்தன் வங்கி கணக்குகள் குறித்து இந்தியன் ஓவர்சீஸ் வங்கி அலுவலர் திரு. தமிழினியன் எமது செய்திபிரிவிடம் தெரிவிக்கையில்

.. வாய்ஸ் ..

□□□□□□

ஜெய்சங்கர்

புதுதில்லியில் இன்று நடைபெறும் 2-வது இந்தியா - சிலி கூட்டு ஆணைய பேச்சு வார்த்தையில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் பங்கேற்கிறார்

இந்தியா வந்துள்ள சிலி நாட்டின் வெளியுறவு அமைச்சர் அல்பர்டோ வான்னும் இதில் கலந்து கொள்கிறார்

இரு அமைச்சர்களும் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறனர்

திரு. அல்பர்டோ இருநாட்டு வர்த்தக உச்சிமாநாட்டிலும் பங்கேற்க உள்ளார்.

சிலி அமைச்சரின் இந்திய பயணம் இருதரப்பு உறவையும், ஒத்துழைப்பையும் மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது

□□□□□□

பணிக்குழு

மருத்துவ தொழில் நிபுணர்களின் பாதுகாப்பிற்கான குறுகியகால நடவடிக்கைகள் குறித்து மாநில தலைமைச் செயலர்கள் மற்றும் காவல்துறை தலைவர்களுடன் தேசிய பணிக்குழு இன்று உயர்நிலை ஆலோசனைகளை மேற்கொண்டது

காணொலி வாயிலாக நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மத்திய உள்துறை செயலரும், சுகாதாரத்துறை செயலரும் பங்கேற்றனர்.

மருத்துவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் பணிச்சூழல் போன்றவற்றை ஆராய உச்சநீதிமன்றம் இந்த உயர்மட்ட பணிக்குழுவை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக நேற்று புதுதில்லியில் நடைபெற்ற இப்பணிக்குழுவின் முதல் கூட்டத்தில் பல்வேறு கருத்துக்கள் முன் வைக்கப்பட்டதாகவும்,

பாதுகாப்பு தொடர்பாக 400-க்கும் மேற்பட்ட கருத்துக்கள் பெறப்பட்டதாகவும் இக்குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே இதுதொடர்பாக தனிநபர் கருத்துக்களை பெற மத்திய சுகாதார அமைச்சகம் தேசிய வலைதள முகப்பை தொடங்கியுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மாநிலங்களும் உரிய தகவல்களை பகிர்ந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தேசிய பணிக்குழுவினர் மருத்துவர்களின் பாதுகாப்பு தொடர்பான இடைக்கால அறிக்கையை 3 வாரங்களுக்குள்ளும், இறுதி அறிக்கையை 2 மாதங்களுக்குள்ளும் வழங்க உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

□□□□□□

அனில்குமார் லஹோட்டி

செல்போனில் தேவையற்ற குறுஞ்செய்திகள் மற்றும் அழைப்புகள் வருவதை தடுக்க ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் - ட்ராய் தலைவர் திரு. அனில்குமார் லஹோட்டி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற ட்ராய் கூட்டத்தில் உரையாற்றியஅவர், நுகர்வோரை பாதுகாக்கும் வகையில் தகவல் கட்டமைப்பை முறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

□□□□□□

ஜீதேந்திர சிங்

மத்திய பணியாளர் நலன், ஓய்வூதியர்கள் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜீதேந்திர சிங் புதுதில்லி விஞ்ஞான் பவனில் அனுபவ் விருதுகள் 2024-ஐ இன்று வழங்குகிறார்.

நிர்வாகப்பணி, ஆராய்ச்சி, நடைமுறைகளை எளிமைப் படுத்துதல், பணியை மேம்படுத்துவதற்கான ஆலோசனை உள்ளிட்டவைகளின் அடிப்படையில் இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

இந்நிகழ்வின் போது ஓய்வு பெறுவோருக்கு பல்வேறு முதலீட்டு முறைகள், அவற்றின் பலன்கள், திட்டமிடல் குறித்த பணி ஓய்விற்கு முந்தைய ஆலோசனை பயிலரங்கிற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

□□□□□□

அமித்ஷா

காவல்துறை ஆராய்ச்சி, புலனாய்வு மேம்பாட்டு பிரிவின் 54-வது நிறுவன நாள் நிகழ்ச்சியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா புதுதில்லியில் இன்று பங்கேற்கிறார்.

புதிய குற்றவியல் சட்டங்கள், குடிமக்களை மையப்படுத்திய சீர்திருத்தங்கள் என்ற தலைப்பில் இதில் உரையாற்ற உள்ள அமைச்சர், 2023-24-ம் ஆண்டுகளில் குடியரசுத்தலைவர் விருதுகளை வென்ற காவலர்களை கவுரவிக்கிறார்.

புதிய குற்றவியல் சட்டங்கள் குறித்த இந்திய போலீஸ் ஜெர்னல் சிறப்பு பதிப்பையும் வெளியிடுகிறார்.

□□□□□□

தேர்தல்

ஜம்மு காஷ்மீரில் 24 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 18-ம் தேதி நடைபெறும் முதற்கட்ட தேர்தலுக்கு தாக்கலான வேட்பு மனுக்கள் இன்று பரிசீலிக்கப்படுகின்றன

மனுக்களை திரும்ப பெற நாளைமறுநாள் கடைசி நாளாகும்.

அதேபோல் 26 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 25ம் தேதி நடைபெறும் இரண்டாம் கட்ட தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் நாளை தொடங்குகிறது.

□□□□□□

மகேஷ் பொய்யாமொழி

தமிழ்நாட்டிற்கு உரிய கல்வி நிதியை மத்திய அரசு வழங்கவேண்டும் என்று மாநில பள்ளிக்கல்வி துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி வலியுறுத்தியுள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், தமிழ்நாட்டில் கல்வித் துறைக்கு ஜுன் மாத நிதி ஒதுக்கீடான 573 கோடி ரூபாயும்,

சென்ற ஆண்டு வழங்கப்பட வேண்டிய கடைசி தவணையான 249 கோடி ரூபாயும் மத்திய அரசு இதுவரை வழங்கவில்லை என்றும் அவர் குறை கூறியுள்ளார்.

இதுகுறித்து தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தி இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் மாணாக்கரின் கல்வி பாதிக்கும் நிலை உருவாகும் என்றும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

உயர்கல்வியில் சேரும் மாணாக்கரின் எண்ணிக்கை 50 சதவிகிதமாக இருக்க வேண்டும் என்ற மத்திய அரசின் இலக்கை 2 ஆண்டுகளுக்கு முன்பே தமிழகம் எட்டிவிட்டதாக கூறிய அமைச்சர் எனவே தமிழகத்திற்கு கூடுதலாக நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

□□□□□□

க.பொன்முடி

தமிழ்நாட்டில் பொறியியல் பிரிவில் இந்த ஆண்டு மாணாக்கர் சேர்க்கை அதிகரித்துள்ளதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. க.பொன்முடி தெரிவித்துள்ளார்

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், 3-வது கட்ட கலந்தாய்வின் இறுதியில் 16 லட்சத்து 620 பேர் பொறியியல் படிப்பில் சேர்ந்துள்ளதாக குறிப்பிட்டார்.

சென்னை கோட்டூர்புரத்தில் நடைபெற்ற விண்வெளி தினவிழாவையொட்டி நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணாக்கருக்கு பரிசுகளை வழங்குகிறார்.

□□□□□□

உதயநிதி

சென்னை போக்குவரத்து கழக மத்திய பணிமனையில் அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்திற்கு 90 கோடியே 52 லட்ச ரூபாய் மதிப்பிலான, 150 அதிநவீன சொகுசு பேருந்துகளின் இயக்கத்தை மாநில இளைஞர்நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.

மாநில போக்குவரத்து துறை திரு. சிவசங்கர், மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர்பாபு உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

□□□□□□

மனோ தங்கராஜ்

ஆவின் பால் உற்பத்தி பொருட்களை நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்

சென்னையில் இன்று இதனை தெரிவித்த அவர், பண்டிகை காலங்களில் ஆவின் பொருட்கள் சலுகை விலையில் விற்கப்படுவதாக குறிப்பிட்டார்

ஆவின் பொருட்களை சந்தை படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் ஆவின்பால் தடையின்றி விநியோகம் செய்யப்படுவதாக கூறினார்.

□□□□□□

டீ.நுஇ டீ.வுநஉா

டீ.நுஇ டீ.வுநஉா பொறியியல் படிப்பில் சேர்வதற்கான துணை கலந்தாய்விற்கு இன்று முதல் மாணாக்கர் விண்ணப்பிக்கலாம்.

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பொறியியல் சேர்க்கை சேவை மையங்கள் மூலம் வரும் 4-ம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என்று அரசு தெரிவித்துள்ளது.

□□□□□□

இருவரி

நாமக்கல் மாவட்டத்தில் பெண்குழந்தைகளை காப்போம் ! பெண்குழந்தைகளுக்கு கற்பிப்போம் ! திட்டத்தின் கீழ் ராசிபுரம் திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி மாணவிகளுக்கு திறன் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இந்நிகழ்வை துவக்கி வைத்து பேசிய ஆட்சித்தலைவர் டாக்டர் உமா மாணவிகள் தொழில்முனைவோராக மேம்பட இப்பயிற்சி வழிகோலும் என்றார்

திருவாரூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் நாளை நடைபெறவுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. சாருஸ்ரீ தெரிவித்துள்ளார்.

□□□□□□

விபத்து

தென்காசி சுரண்டையில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 3 பெண்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

வாடியூர் கிராமத்தில் வயல் வேலைக்காக சென்றபோது சரக்கு ஆட்டோ கவிழ்ந்ததில் இவ்விபத்து நேரிட்டது.

காயமடைந்த 10-க்கும் மேற்பட்டோர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

□□□□□□

வேளாங்கண்ணி

வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலய திருவிழா நாளை கொடியேற்றத்துடன் தொடங்கவுள்ள நிலையில்

திருவாரூரிலிருந்து பாதயாத்திரையாக செல்லும் பக்தர்களின் வசதிக்காக காவல்துறை சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது

□□□□□□

கோவில்

திருவாரூர் மன்னார்குடி அருள்மிகு ராஜகோபால சுவாமி திருக்கோவிலில் கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு உறியடி வைபவம் இன்றுமாலை நடைபெற உள்ளது.

சேரன்குளம் வெங்கடாஜலபதி வடுவூர் கோதண்ட ராமர் திருக்கோவில்களிலும் இன்றுமாலை உறியடி நிகழ்ச்சி நடைபெறும்.

□□□□□□

ரு.ளு. ஓப்பன்

நியூயார்க்கில் நடைபெறும் ரு.ளு. ஓப்பன் கிரான்ஸ்லாம் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ஸ்ரீராம், அர்ஜெண்டினாவின் ஆண்ட்ரோஸி இணை - நியூசிலாந்து மெக்சிக்கோ இணையை இன்றிரவு எதிர்கொள்கிறது.

கலப்பு இரட்டையர் முதல் சுற்றில் ரோஹன் போப்பன்னா, இந்தோனேஷியாவின் சுட்ஜியாடி இணை இன்று களமிறங்குகிறது.

□□□□□□

பாராலிம்பிக்ஸ்

பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் 17-வது பாராலிம்பிக்ஸ் போட்டிகள் இன்றிரவு தொடங்குகின்றன.

அடுத்த மாதம் 8-ம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டிகளில் 169 நாடுகளை சேர்ந்த நான்காயிரத்திற்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் களமிறங்குகின்றனர்.

இந்தியாவின் சார்பில் 12 பிரிவுகளின் கீழ் 84 பேர் பங்கேற்கவுள்ளனர்.

பாரா சைக்ளிங், ஜுடோ, படகு போட்டிகளில் இந்திய அணி முதன்முறையாக பங்கேற்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகள் அடுத்த மாதம் 8-ம் தேதி வரை நடைபெறும்.

□□□□□□

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது